முருகப்பெருமான் துணை

**மகான் கணநாத நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.10.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. காணவே பிரணவக் குடிலினை
கண்கோடி வேண்டும் மக்களுக்கு
ஞானமாக ஞானச் சொரூபமாக
ஞானபண்டிதனாக சூட்சுமமாக
2. ஆகவே வீற்றிருக்கும் அரங்கன்
அமைவிடம் தென் கயிலையே
வகைபட அன்ன பூரணியே
வாசம் செய்யும் அருளமுது
3. அருளமுது அன்னதான வடிவில்
அருமருந்தாக ஆட்சி செய்ய
வருபவர்க்கு பசிபிணி விலகும்
வருங்காம் வளமாக்கும் எனக்கூறி
4. கூறியே அறிவுரை ஆசி
குறைவிலா சோபகிருது தரிவைதிங்கள்
அறிவிப்பேன் முன்னான்கீர்திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள், 01.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
அய்யமற கணநாத நாயனாரும் உரைப்பேன்
5. உரைக்கவே ஓங்கார பலம்
உலகமெங்கும் ஒலியாகப் பரவி
அரங்கன் தொண்டர்படை வழி
அறமாகப் பரவி வருக
6. வருகவே அரங்கன் பெருமை
வல்லமையான அவதாரம் யாவும்
வருமுலகில் உலகம் அறிந்துமே
வணங்கி ஏற்று வருக

7. வருகவே எங்கும் தருமபலம்
வளமாக்கி இயற்கை துணைபட
வறுமை இல்லா ஞானபூமியாக
வாய்மை கொண்ட மக்கள் சமூகமாக

8. ஆகவே அரங்கன் ஞானவழி
அனைவரையும் மாற்றி மீட்கும்
செகமே மாயை சிக்கலை
சடுதி விட்டு தெளிவுபெறும் வண்ணம்

9. வண்ணமுடன் சூட்சும ஆற்றல்
வழங்கியே மீட்புத் தரும்
எண்ணம் மாற்றி அவரவருள்ளும்
எல்லாம் இறைசெயல் என

10. என அறியும்படித் தெளிவு
எல்லாம் சமம் எனும் அறிவு
ஞானமே திடம் நம்பகமே பலமென
நல் சரணடைவும் ஆகியே

11. ஆகியே அற்புதம் கிட்டும்
அரங்கன் மகிமையென உணர்ந்து
மகிழவே சேவையும் ஈர்ப்பும்
மகான்வழி கடைநாளும் தொடரும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–